தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீடு எண். 77 /2026 **நாள்: 09.07.2026**

செய்தி வெளியீடு

தேர்வாணையத்தால் கணினி வழித் தேர்வு மூலம் நடத்தப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுக்கான விடைத்தாள்கள் தேர்வாணைய இணையதளத்தில் 10.07.2026 அன்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தேர்வர்கள், தங்களுடைய ஒருமுறை பதிவு எண் வாயிலாக விடைத்தாளினை உரிய கட்டணம் செலுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்:

அறிவிக்கை எண்	தேர்வின்/பதவியின் பெயர்	தேர்வு நாள்	பதிவிறக்கம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள காலம்
01/2023	தமிழ் நாடு வேளாண்மை விரிவாக்கப் பணிகளில் அடங்கிய வேளாண்மை அலுவலர் (விரிவாக்கம்) மற்றும் தமிழ் நாடு தோட்டக்கலைப் பணிகளில் அடங்கிய தோட்டக்கலை அலுவலர் பதவிகளுக்கான தேர்வு	20.05.2023 மற்றும் 21.05.2023	10.07.2026 முதல் 08.08.2026 வரை (30 நாள்கள்)

விடைத்தாள்களை பதிவிறக்கம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள காலத்திற்கு பிறகு, விடைத்தாள்களை வழங்கக் கோரி தேர்வர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டாது.

ப. ஸ்ரீவெங்கட பிரியா, இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்